**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புகள் – 2016–17ஆம் நிதியாண்டு பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள் வழங்கும் திட்டம்– நிருவாக அனுமதி வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத்(மா.தி.ந.2.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.37** **நாள்: 30–11–2016**

**துன்முகி–கார்த்திகை 15, திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலசைச்சர் அவர்கள் அறிவிப்பு நாள் 30.08.2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.4290/இவாததி/2016/ நாள் 31.08.2016.

-----

**<u>ஆணை:</u>**

சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ், 30.08.2016 நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றுனுள் கீழ்க்காணும் அறிவிப்பு செய்துள்ளார்:–

> ‘‘பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மடக்குக் குச்சிகள் மூலம் மிக அருகில் உள்ள பொருட்களை மட்டுமே அறிந்து கொள்ள இயலும். எனவே, நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும். இந்த குச்சிகள் மூலம் அவர்கள் அதிக தூரத்தில் உள்ள பொருட்களையும் உணர்ந்து கொள்ள இயலும். இதன் காரணமாக பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் தங்கு தடையின்றி பயணிக்க இயலும். இந்த ஆண்டு 5,000 பயனாளிகளுக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்படும். இந்த திட்டம் ஒரு கோடியே 58 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்’’.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில், 2016–17 ஆம் நிதியாண்டில் ஒளிரும் மடக்கு குச்சிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தும் பொருட்டு, ரூ.3,165/– மதிப்பீட்டில் 5,000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்க ஏதுவாக ரூ.1,58,25,000/– நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. 30.08.2016 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண்.110–ன் கீழ், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் பயனளிக்கக் கூடிய வகையில்

[த.பி.பா]

(Smart Cane) நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள் 5,000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு நடைமுறையில் உள்ள கொள்முதல் விதிகளைப் பின்பற்றி வாங்கி வழங்க ஏதுவாக நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.62118/நிதி(சந)/2016, நாள் 27.11.2016ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர்,சென்னை–18.
**நகல்:–**
நிதி (சந) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.